RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22216

OPEN ACCESS

# வரலாற்று நோக்கில் பதம்

**சுகன்யா அரவிந்தன் [அ, *]**

[அ] இசைத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை

# Padam in Historical Perspective

**Suhanya Aravinthon [a, *]**

[a] Department of Music, University of Jaffna, Jaffna, Sri Lanka.

* Corresponding Author: saravinthon@hotmail.com

Received: 15-10-2021
Revised: 03-03-2022
Accepted: 11-03-2022
Published: 26-04-2022

Check for updates

**ABSTRACT**

It is a fact of history that songs have appeared in Tamil art culture from time to time and have enriched the arts. Language and art are generally interdependent within the cultural elements of a community. In this way, it is possible to know through the histories that the genres of songs have changed without any change in the cultural changes that have taken place in the history of music and dance in Tamil Nadu from time to time. This article is intended as a historical overview of the genre of Padam, an item that is considered important in the Carnatic music and Bharatanatyam tradition. This article will annualize about what we mean by term, the source, content, usage of this term and other aspects in Padam.

**Keywords:** Padam, Uruppadi, Chrunkaram, Intro songs, Intuition, Artistry.

## முன்னுரை

கர்நாடக இசை மரபிலும் பரதக்கலை மரபிலும் காலந்தோறும் இசைப்பதற்கென பாடல்கள் எழுதப்பட்டிருப்பது வரலாறு. இந்தப்பாடல்கள் அக்காலத்திலே இசை எந்தநோக்கத்துக்காக சமூகத்திலே பயன்படுத்தப்பட்டிருந்ததோ அவை சார்ந்த கருப்பொருள்களிலேயே எழுதப்பட்டிருந்தன. இந்த வகையிலே பதம் என்பது சிருங்கார ரசம் கொண்ட ஒரு உருப்படி வகையாகும். இது பொரும்பாலும் கர்நாடக இசைக் கச்சேரிகளில் பாடப்படுவது மாத்திரமல்லாமல் நாட்டியக் கச்சேரிகளில் ஆடப்பட்டும் வந்திருக்கின்றது. வழிபாட்டிலும் ஆற்றுகையிலும் மிக முதன்மைப்படுத்தப்பட்ட உருப்படி வகையாக அது காணப்படுகின்றது.

## பதம்

பரத நாட்டியத்திற்கான இசை உருப்படிகளில் பதமும் ஒன்றாகும். இந்த வகை உருப்படி கர்நாடக இசைக்குரியது. பரத நாட்டியத்திற்குப் பண்ணிசையும், கர்நாடக இசையுமே பயன்படுத்தப்பட்டு வந்திருந்தாலும், கர்நாடக இசை சார்ந்துதான் அதன் சிறப்பான மலர்ச்சி பிற்காலத்திலே ஏற்பட்டுள்ளது எனலாம். பரதநாட்டிய நிகழ்ச்சி நிரலிலே பதம் ஒரு முக்கியமான இடத்தினை வகிக்கின்றது. எனவே இவ்வுருப்படியின் வரலாறு, இதை இயற்றியுள்ள வாக்கேயகாரர்கள், இதனைப் பயன்படுத்தி பரதநாட்டியத்திலே புகழ் பெற்ற ஆடற்கலைஞர் பற்றி அறிந்திருப்பதும், இன்றைய கலை உலகிலே இவ்வுருப்படி எடுத்துக்கொள்கின்ற இடம்பற்றியும் நோக்குவது பயனுடையதாகும்.

பொதுவாகப் 'பதம்' எனும் வார்த்தை, 'பாதம்' (கால்) எனப் பொருள்படினும் கர்நாடக இசை மற்றும் பரதநாட்டிய மரபிலே 'இசை உருப்படி', 'சாகித்யம்', 'பாட்டு' எனும் சிறப்புப் பொருள்களிலே நிலவி வந்துள்ளது. உணர்ச்சியின் பல நிலைகளில் குறிப்பாக சிருங்கார (காதல்) நிலைகளைச் சித்தரித்து அவற்றை நன்கு அபிநயித்துக் காட்டுவதற்கான ஒரு சிறந்த உருப்படியாக இது விளங்குகின்றது. ரசங்கள் ஒன்பதாயினும் அவற்றுள்ளே சிருங்கார (காதல் பற்றிய) ரசமே சிறந்தது எனக் கருதப்படுகின்றது. இறைவனாகிய நாயகனுக்கும் இறைவியாகிய ஆன்மாவுக்கும் இடையிலே ஏற்படக்கூடிய பந்தத்தினை உலகியல் நிலையிலே நிறுத்தி சிற்றின்ப உறவுநிலைக்கூடாகப் பேரின்பமுக்தியை எடுத்துரைக்கும் மார்க்கமாக இவ்வுருப்படி அமைகின்றது.

சிருங்கார ரசம் விப்ரலம்ப சிருங்காரம் (நாயகன், நாயகி பிரிந்திருக்கும் போது ஏற்படுவது), சம்போக சிருங்காரம் (நாயகன் நாயகி சேர்ந்திருக்கும் போது ஏற்படுவது) என இருவகைப்படும். இவற்றுள்ளே முன்னையதே சிறந்ததெனக் கருதப்படுகின்றது. காரணம் இறைஅருளைத்தேடி உழலும் ஆன்மா படும் துன்பங்களை மிகத்தெளிவாக உடுத்துரைக்க வாய்ப்பாக அமைகின்ற மார்க்கம் இதுவாகக் கருதப்படுகின்றது (Jeyarasa, 2007a).

பதம் எனப்படுவது குறிப்பாகக் காதல் உணர்வுபூர்வமான பாடல்களாக அமைகின்றது என்பது காளிதாசரின் (கிபி 4, 5-ம் நூற்றாண்டுகள்) மேகதூதம் என்கின்ற அற்புதமான படைப்பினால் புலப்படுகின்றது. பதம் என்கின்ற உருப்படிவகைக்குரிய பண்பியல்புகளை இவ்விலக்கியத்திலே மிகத் தெளிவாக இனங்கண்டு கொள்ளலாம். இந்நூலிலே தன்னுடைய நாயகியைப் பிரிந்து மனவேதனையுற்ற ஒரு யக்சன் அவளிடம் தூது செல்லுமாறு மழை முகிலை (மேகத்தினை) நோக்கிக்கூறும்போது, தன்னுடைய நாயகி பிரிவாற்றாமையால் தன்னுடைய பெயரை (தலைவன் பெயரை) முத்திரையாகக்கொண்ட புதிய பதத்தினை வீணையிலே வாசித்துக்கொண்டிருப்பாள் எனக்குறிப்பிடுவதை இந்நூலிலே காணமுடிகின்றது (Natarasa, 1954).

எனவே பதம் என்பது காலத்தினால் முற்பட்ட பாடல் வகையாகும். இது நீண்டகால வரலாற்றைக் கொண்டிருக்கின்றது. சங்கீத சாஸ்த்திரம் பற்றிய நூலான சங்கீதரத்னாகரத்தில் அதன் ஆசிரியரான சாரங்கதேவர் (கிபி 13ம் நூற்றாண்டு) பிரபந்தம் என்பது ஸ்வர, பிருத, பத, தேனகா, பாடம், தாளம் என்னும் ஆறு அங்கங்கள் கொண்டதாகும் எனக்குறிப்பிட்டுள்ளார். இங்கு பதம் என்பதற்கு 'சொற்களால் வெளிப்படுத்துகின்ற ஒன்று' எனப் பொருள் கொள்ளப்படுகிறது (Jeyarasa, 2007a). பல்லவி எனும் சொல் பதம், லயம், விந்யாசம் எனும் மூன்று சொற்களும் மூன்று எழுத்துக்களினின்றும் வந்ததெனக் கூறப்படும். இங்கு இதே பொருளில் பதம் வந்துள்ளது (Jeyarasa, 2007b).

சதுர்தண்டிப்பிரகாசிகையின் ஆசிரியரான வேங்கடமகி (கிபி 17ம் நூற்றாண்டு) பிரபந்தத்தின் அங்கங்களில் ஒன்றான பதம் என்பது 'தலைவனுடைய வீரப்பண்புகளையும், சாதனைகளையும் விபரிக்கும் சாகித்யத்தின் வரியாகும்;' எனக்குறிப்பிட்டுள்ளார். (சிவசாமி. வி.: 1988) ஏதாவது ஒரு ரசபாவத்தை விளக்கும் சாகித்யத்தைக் குறிக்கவே பதம் எனும் சொல் கிபி. 17ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை பயன்படுத்தப்பட்டது என்பதனைத் தெரிந்துகொள்ளுவதற்கு இக்குறிப்புப் பயனுடையதாகின்றது.

கி.பி. 17ம் நூற்றாண்டின் முற்பகுதியிலேதான், இவ்வுருப்படி சிருங்கார ரசத்துடன் நன்கு இணைக்கப்பட்டதற்கான ஆதாரங்கள் கிடைக்கப்பெறுகின்றன. தஞ்சாவூரிலே ஆட்சிசெய்த நாயக்க அரசரான விஜயராகவநாயக்கர் தமது ரகுநாதாப்யுதயம் எனும் யக்கானத்திலே பதம் எனும் சொல்லை சிருங்கார ரசத்தை புலப்படுத்தும் இசை உருப்படியாகக் குறிப்பிட்டுள்ளார். இக்கால இசை வழக்கிலே பதம் நாட்டிய இசை சார்ந்தும், மதுரபக்தியின் பல்வேறு பண்புக்கூறுகளைக் கையாளுவதுமான ஓர் உருப்படியாகக் கருதப்படுகின்றது (Sivasami, 1998). இது பல்லவி, அனுபல்லவி, சரணம் ஆகிய பகுதிகளைக் கொண்டிருக்கும். மேற்குறிப்பிட்டவர்களின் காலத்திற்கு முன்பு கிபி. 3ம் நூற்றாண்டில் வாழ்ந்த பல்குரிக சோமநாத எனும் புலவர் இலக்கியத்திலே பதம் பற்றிச் சுமார் இருபது பெயர்களைக் குறிப்பிட்டுள்ளார். கி பி 15ம் நூற்றாண்டில் வாழ்ந்த அன்னமாச்சாரியார் தெலுங்கு மொழியிலே தும்மேத பதம் (வண்டு), வெண்ணெல பதம் (வெண்ணிலா), சிலக பதம் (கிளி) எனப்பல பதங்களை இயற்றியுள்ளார் (Sivasami, 1998). அதாவது வண்டுகளைத் தூது எனுப்புவதாகவம், வெண்ணிலாவைத் தூது அனுப்புவதாகவும், கிளியினைத் தூது அனுப்புவதாகவுமாகப் பல பதங்களை இவர் எழுதியிருப்பதாகப் பதிவுகளில் காண முடிகின்றது.

இவர் சங்கீதலக்கணம் எனும் தனது நூலில் 'பதம்' எனும் சொல்லைப் 'பாட்டு' எனும் கருத்திலே பயன்படுத்தியுள்ளார். தாளப்பாக்கம் வாக்கேயகாரர்களும் (இவர்களும் தெலுங்கு தேசத்தவர்கள்) பதங்கள் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். இக்காலப் பதங்களில் பல்லவி, சரணம் இரண்டும் மட்டுமே உருப்படிகளில் அமைந்திருப்பதைக் காணமுடிகின்றது. சமகாலமிதுபர்த்தி கவிஞர்களும், வேறு சிலரும் சைவசமயப் பதங்களை ஆக்கியுள்ளனர். அன்னமாச்சாரியார் சிருங்காரப்பதங்களை இயற்றியுள்ளார். அத்துடன் தமது பதங்களிலே பேச்சு வழக்கிலுள்ள சொற்களையும் சேர்த்து அவற்றை ஜனரஞ்சகமாக்கியுள்ளார். அவருடைய மகத்தான பணிகளுக்காக 'பதகவிதாபிதாமஹ' எனச்சிறப்பாகப் போற்றப்படுகின்றார் (Sivasami, 1998). மேலும் பலர் பதங்களை இயற்றுவதற்கான முன் உதாரணக் கலைஞராகவும் இவர் விளங்குகின்றார். குறிப்பாக கிபி 17ம் நூற்றாண்டிலே வாழ்ந்த பிரபல பத வித்தகர் சேத்ரக்ஞரின் பதங்களுக்கு இவரின் பதங்கள் முன்மாதிரியாக விளங்கின (Sivasami, 1998).

இன்று கிடைத்துள்ள சான்றுகளின் படி நாயக- நாயகி பாவத்தை அடிப்படையாகக் கொண்டு அன்னமாச்சாரியாருடைய 'சிருங்கார சங்கீர்த்தனமுலு' எனத் தொடங்கும் பதமே காலத்தால் முந்திய சிறப்பான பதமாகக் கொள்ளப்படுகின்றது (Sivasami, 1998).

சிறந்த பதங்களை இயற்றிய சேத்ரக்ஞர், கர்நாடக இசையின் பிதாமகனெனக் கருதப்படும் புரந்தரதாசர் (கிபி 15ம் 16ம் நூற்றாண்டு) அவருக்குச் சற்று முற்பட்ட சமகாலத்தவரான அன்னமாச்சாரியார் (கிபி 15ம் 16ம் நூற்றாண்டு) ஆகியோருக்குப் பிற்பட்டவர் எனவும் சுமார் கிபி 1600 - 1680 வாழ்ந்தவர் எனவும் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. கர்நாடகஇசை வரலாற்றில் ஸ்ரீ புரந்தரதாசர், ஸ்ரீ தியாகராஜசுவாமிகள் போன்று சேத்ரக்ஞரும் ஒரு பெரிய வாக்கேயகாரராக விளங்கியவர். குறிப்பாக பதம் எனும் உருப்படியிலே இவர் மிகக் கூடுதலான கவனம் செலுத்திக் கர்நாடக இசைக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளார். பதங்களை இயற்றியோரில் இவர் நிகரற்றவர் எனப் பொதுவாகக் கொள்ளப்படுகின்றது. இவருடைய 'மேருவ' பதத்திலேயே (இவரின் சிறப்பான பதம்) இவர் 4200 பதங்கள் இயற்றியதாகக் கூறப்படுகின்றது (Sivasami, 1998). இவர் ஏறக்குறைய 50 ஆண்டுகளாகப் பெருந்தொகையான பதங்களை இயற்றியிருந்தாலும், அவற்றிலே 382 பதங்களே இன்று கிடைக்கப்பெற்றிருக்கின்றன. இவற்றுள்ளும் 128 பதங்களுக்கு இசையமைக்கப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது. இப்பேர்ப்பட்ட பெரிய வாக்கேயகாரர் ஆந்திரா தேசத்தைச் சேர்ந்த முவ்வபுரியில் பிறந்தவர். முவ்வகோபால இவரின் இஸ்ட தெய்வம். இவரின் பல பாடல்களில் 'முவ்வ கோபால' என்கின்ற நாமம் முத்திரையாக வந்துள்ளது. இவரின் பதங்கள் பல இன்றும் கர்நாடக இசை மற்றும் பரத அரங்கேற்ற நிகழ்ச்சிகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றன. பரதநாட்டியத்திற்கான சிருங்கார ரசத்தின் பல்வேறு அம்சங்களையும் நன்கு புலப்படுத்துவதற்கு இவை மிகப்பொருத்தமானவை. இவை தெலுங்கு மொழியிலுள்ளன. இவரின் பதங்கள் விளம்பகாலத்திலே அதாவது மந்தகதியிலே பாடப்படுவன. எனவே நடனத்திற்கான அபிநயங்களையும் பாவங்களையும் நன்கு புலப்புடுத்துவதற்கு மிகப்பொருத்தமானவையாக இவை அமைகின்றன. இவரின் சிறந்த பதங்கள் சில எடுத்துக்காட்டுக்களாக இங்கு குறிப்பிடப்படுகின்றன. 'நின்னு ஜூட்' (புன்னாகவராளி), 'எமோதெலியது' (சாவேரி), 'ஏமந்துனம்ம' (கேதார கௌளை), 'எவ்வதே' (சங்கராபரணம்) போன்ற பலவற்றினைக் குறிப்படலாம்.

தஞ்சாவூர் நாயக்க மன்னர் ஆட்சிக்காலத்திலே பல வகையான பதங்கள் பயன்பாட்டிலிருந்தன. தஞ்சாவூரிலிருந்த அரண்மனையிலே ரூபாவதி, லோகநாயகி எனும் சிறந்த நடனமணிகள் பதங்களுக்குச் சிறப்பாக நடனமாடி வந்தனர். மதுரை நாயக்க மன்னர்களின் அரண்மனையிலும் பதங்கள் இடம்பெற்றமைக்கான சான்றுகள் கிடைக்கின்றன (Seetha, 2001). இவ்வரண்மனையை அணி செய்தவர்களில் ஒருவரான கனம் சீனியய்யா என்றழைக்கப்பட்ட வங்காள சீனய்யா ஒரு பிரபல பத கர்த்தா. குறிஞ்சி இராகத்தில் அமைந்ததும், ஜனரஞ்சகமானதுமான 'சிவ தீக்சா பருரலநுர' போன்ற இவருடைய பதங்கள் பிரசித்தமானவை. முவ்வநல்லூர் சபாபதி ஐயரும் ஒரு பிரபல பத கர்த்தா. இவர் சிருங்கார பதங்கள் பலவற்றை இயற்றியிருக்கின்றார்.

தமிழிலும் பல பதங்கள் இயற்றப்பட்டு வந்துள்ளன. காலத்தால் முந்திய தமிழ் பத கர்த்தாக்களில் முத்துத்தாண்டவர் குறிப்பிடற்பாலர். மாரிமுத்தாப்பிள்ளை பிறிதொரு பிரபலமான பத கர்த்தா. கல்யாணி இராகத்தில் அமைந்த 'எத்தை கண்டு' எனத்தொடங்கும் தமிழ்ப்பதம் இன்றும் குறிப்பாக நாட்டிய அரங்குகளிலே பயன்படுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகின்றது. தமிழிலே பதங்கள் இயற்றியோரில்

மேலும் இருவராக வைத்தீஸ்வரன் கோயில் சுப்பராமஜயர் என அழைக்கப்படும் பிக்ண்டார் கோவில் சுப்பராமஜயரையும், கனம் கிருஸ்ணஜயரையும் குறிப்பிடலாம். சுப்பராமஜயரின் பதங்களில் குறிப்பிட்ட தொகை பக்தி பூர்வமானவை. கனம் கிருஸ்ணஜயர் மிகச்சிறந்த பதங்களை இயற்றியவர்களில் ஒருவராவார். மேலும் இலங்கையைச் சேர்ந்த இயலிசை வாரிதி ப்ரம்ம ஸ்ரீ வீரமணிஜயரும், இசை ஆசிரியரான ஏரம்புவும் தமிழிலே பதங்களை இயற்றியள்ளனர் (Chelladurai, 2009).

இன்றைய பதிவுகளிலிருந்து பதங்களை யாத்தவர்கள் பட்டியலில் பலரது பெயர்கள் குறிப்பிடப்படுவதைக் காணலாம். தெலுங்கிலே சேத்ரக்ஞரைத்தவிர பெரிய தாசரி, பரிமளரங்கர், கஸ்தூரி ரங்கர், சாரய்கபாணி, முவ்வலூர் சபாபதிஜயர், அமலட்டூர் வெங்கடராமசாஸ்த்திரி, சோபன கிரிவாரு, கடபல்லிவாரு, பொல்லபுரமுவாரு, வீரபத்ரய்யர், கவிமாத்ருபூதய்யர், இப்படிப்பலரது பெயர்கள் தெலுங்கு பதங்களை இயற்றியவர்களது பட்டியலில் இடம் பெறுகின்றது. இதேபோல தமிழ்ப் பதங்கைள எழுதியவர்கள் பட்டியலை நோக்குகின்ற பொழுது மாரிமுத்தாப்பிள்ளை, அருணாசலக் கவிராயர், கோபாலகிருஸ்ணபாரதியார், பாபவிநாச முதலியார், கனம் கிருஸ்ணய்யர், கவிக்குஞ்சரபாரதி, மாம்பழக் கவிராயர், வேதநாயகம் பிள்ளை, இராமலிங்கசுவாமிகள், எட்டயபுரம் நாராயனசாமி ஐயர் போன்றோரது பெயர்கள் இணைக்கப்படுகின்றது. இவர்கள் பதங்களும் இன்று கலையரங்குகளிலே ஆற்றுகையாளர்களால் இணைத்துக் கொள்ளப்படுகின்றது (Chelladurai, 2009).

பதங்கள் கர்நாடக இசையிலும், பரதநாட்டியத்திலும் நன்கு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளன. நடனத்திலே சிருங்கார ரசத்தைச் சித்தரிக்கும் பதங்களின் இசை வளம் மேம்பட்டுள்ளது எனக்கருதப்படுகின்றது. 'நடன நிகழ்ச்சிகளிலே பதங்கள் இடம்பெறும் போது நடனக்கலைஞர் பார்வையாளருக்கு நேர்த்தியான அபிநயங்கள் மூலம் துலக்கமான கருத்துக்களை வெளிப்படுத்துவதால் சாகித்யம் மட்டுமன்றி இசையும் மிகச்சிறப்பாக விளங்கும்' எனவும், 'ராகமும் அபிநயமும் அழகாக ஒன்றிணைந்து மிகச்சிறப்பான நிலையுடையன' எனவும் பேராசிரியை சீத்தா அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் நன்கு கவனிக்கத்தக்கவை (Seetha, 2001). முற்பட்ட காலத்திலே சதிர் நடனத்திலே பதம் பாடுவதும், ஆடுவதும் பல்லவியிலன்றி அனுபல்லவியிலே தொடங்கும் எனக்கூறப்படுகின்றது.

பதம் மத்திமகாலத்திலே பாடப்படுவதால் பல்வேறு அபிநய நுட்பங்கள் தருணத்திற்கேற்ற செயற்பாடுகளைப் புலப்படுத்துவதற்குப் பொருத்தமான உருப்படி எனக் கருதப்படுகின்றது.

தமிழகத்திலே பதங்களை நன்கு பயன்படுத்திப் பேரும் புகழும் பெற்றவர்களிலே மைலாப்பூர் கௌரியம்மா, அபிநயஅரசி பாலசரஸ்வதி ஆகியோர் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இவர்களிலே பாலசரஸ்வதி சுமார் நூறு பதங்களை ஆடலிலே மிக அழகாகவும், நேர்த்தியாகவும் பயன்படுத்தியிருக்கின்றார் எனப்பதிவுகள் மூலம் தெரிந்துகொள்ள முடிகின்றது. அவற்றுள்ளே 'எந்நேரமும்' (தோடி), 'இனி என்ன பேச்சிருக்குது' (சுஹானா), 'ஜகதோத்தாரண' (காபி), 'கிருஸ்ணா நீ பேகனே' (யமுனாகல்யாணி), 'நீலமயில் வாகனனே' (நீலாம்பரி), 'நித்திரையில்' (பந்துவராளி) போன்றவற்றைக் குறிப்பிடலாம். இப்பாடல்கள் பல்வேறு வாக்கேயகாரர்களால் இயற்றப்பட்டது, சாத்வீக அபிநயத்தின் பல்வேறு நுட்பங்களை நன்கு புலப்படுத்துவதற்குப் பதங்கள் நன்கு பொருத்தமானவை.

பதங்கள் கர்நாடக இசைக்குரிய திராவிட மொழிகளான தமிழ், கன்னடம், மலையாளம், தெலுங்கு ஆகியவற்றிலும், இந்தியப்பண்பாட்டுப் பொதுமொழியான வடமொழியிலும் இயற்றப்பட்டுள்ளன. இவை தேவைக்கேற்றவாறு கர்நாடக இசையிலும் பரதநாட்டியத்திலும் பயன்படுத்தப்படுகின்றன.

பதம் சித்தரிக்கும் காதலன், காதலி, தலைவன், தலைவிக்கிடையிலான உணர்வு ரீதியான சிருங்காரம் பற்றிய அம்சங்களைக்காலத்தால் முந்திய இலக்கியச் சான்றுகளின் படி தமிழிலுள்ள சங்க நூல்களில் (இவை சுமார் கி மு. 2ம் நூற்றாண்டு - கிபி 3ம் நூற்றாண்டு வரையுள்ள காலத்தவை) உள்ள பாடல்களிலே சிறப்பாக அகப்பொருள் பற்றியவற்றிலே காணலாம்.

தமிழிலக்கிய வரலாற்றின் முதற்காலமான சங்க காலத்திலே

"யாயும் ஞாயும் யாரா கியரோ

எந்தையும் நுந்தையும் எம்முறைக் கேளிர்"

என்று தொடங்கிய உலகியல் சிருங்காரம் பின்வந்த காலங்களிலே மாணிக்கவாசகரது தேவாரத் திருப்பதிகங்களும் ஆண்டாள் அவர்களது திருப்பாசுரங்களும் இறைவனைத் தலைவனாகவும் தம்மைத் தலைவியாகவும் கொண்டு உலகியல் காதலைத் தெய்வீக உறவாகக் கொண்டு பாடப்பட்ட பாடல்களாக தமிழிலக்கிய வரலாற்றிலே செழுமைபெற்ற பாடல்களாகத் தோற்றம் பெற்றிருந்தன (Parimanam & Balasubramaniyam, 2004).

"மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத..." என்று ஆண்டாளும்

"முன்னிலைக் கடலைச் சுருக்கி எழுந்துடையாள்

என்னத்திகழ்ந்தெம்மை யாழுடையாள் இட்டையின்"

என்று மாணிக்கவாசகருமாக நினைந்து நினைந்துருகிப் பாடிப் பரவியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. அன்பே சிவம். அன்பிலார்க்கு எவ்வுலகும் இல்லை என்று அன்பின் மகத்துவத்தை வாழ்வின் உண்மையை அன்பினூடாக வலியுறுத்தி வந்தனர் (Palaniappan, 2019; Puliyur Kesikan, 2018; Subiramaniya Pillai, 2014).

இக்காலத்தின் இறுதிப்பகுதி அல்லது சற்றுப்பின் தமிழ்நாட்டிற்கு வடக்கேயுள்ள தக்கணத்தில் ஆட்சி புரிந்த ஹால எனும் மன்னன் பிராகிருத மொழியில் இயற்றியதாக கூறப்படும் 'காதாசப்தசதீ' (700 காதற்பாடல்கள்) எனும் நூலும் குறிப்பிடக்கூடிய ஒன்று. தமிழகத்திலிருந்து அகப்பொருள் பற்றிய கருத்துக்கள் வடக்கேயுள்ள கர்நாடகம், மஹாராஸ்டிரம், ஆந்திரதேசம், ஒரிசா, வங்காளம் முதலிய இடங்களுக்குப் பரவியிருக்கலாம் என்கின்ற கருத்து இசைஆய்வாளர்கள் மத்தியிலே பெரும்பாலும் காணப்படுகின்றது.

தமிழகத்தைப் பொறுத்தவரை பல்லவர்- பாண்டியர் ஆட்சிக்காலத்தில் (கிபி 6ம் நூற்றாண்டு - 9ம் நூற்றாண்டு வரை) ஏற்பட்ட சைவ, வைணவ பக்தி இயக்கத்தின் விளைவாக உலகியல் ரீதியான அகப்பொருள் மரபிலே ஆன்மீக ரீதியான மாற்றம் ஏற்பட்டது. அதாவது முன்னர் குறிப்பிட்டவாறு உலகியல் ரீதியிலான காதலன், காதலிக்கிடையிலான தொடர்புகள் ஆன்மீக ரீதியில் இறைவனாகிய காதலனுக்கும், ஆன்மாவாகிய காதலிக்குமிடையேயான தொடர்புகளாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. இப்போக்கினைச் சைவ நாயன்மார்கள், வைணவ ஆழ்வார்களின் பக்திப்பாடல்களிலே காணலாம். எடுத்துக்காட்டாக மாணிக்கவாசகரின் திருவாசகப்பாடல்கள், ஆண்டாளின் திருப்பாசுரங்களைக் குறிப்பிடலாம். பின்னையதிலே பெண்ணாகிய ஆண்டாளே நாயகியாக விளங்குகின்றாள் என்பது குறிப்பிடற்பாலது.

இவ்வாறு மாற்றம் பெற்ற அகப்பொருள் மரபு பற்றிய கருத்துக்கள் தமிழகத்திற்கு வடக்கேயுள்ள மேற்குறிப்பிட்ட இடங்களுக்கும் பரவின எனக்கொள்ளுதல் தவறு அன்று. கிபி 12ம் நூற்றாண்டிலே வங்காளம் ஒரிசா ஆகிய பிரதேசங்களிலே நடமாடிய ஜெயதேவர் இயற்றிய கீதகோவிந்தம் அல்லது அஸ்டபதியில் இப்போக்கு நன்கு காணப்படுகின்றது. தொடர்ந்து பெரும்பாலும் ஆந்திரப்பிரதேசத்தைச் சேர்ந்த அன்னமாச்சாரியார், நாராயணதீர்த்தர், (கிரு ஸ்ணலீலா தரங்கிணி ஆசிரியர்) சேத்ரக்ஞர் போன்றோர்களின் பாடல்களிலும் இப்பாங்கினைக் காணலாம். இவர்களில் இருவர் இயற்றிய பதங்கள் பற்றியும், தமிழகத்தில் இயற்றப்பட்ட பதங்கள் பற்றியும் ஏற்கனவே கூறப்பட்டுள்ளன. பக்தி தென்னாட்டிலிருந்து (குறிப்பாகத் தமிழகத்திலிருந்து) தான் வடநாட்டிற்குப் பரவியதாகப் பத்மபுராணம் கூறியுள்ளமை கவனிக்கத்தக்கது. எனவே பதம் தமிழிலும் வெறு சில மொழியகளிலும் இயற்றப்பட்டிருப்பினும், இது கூறும் மையக்கருத்து தமிழகத்திலே தோன்றி பிற இடங்களுக்குப் பரவிற்று எனப் பொதுவாகக் கொள்ளலாம்.

## முடிவுரை

மனிதனுடைய சிந்தனை வளர்ச்சியிலே உணர்ச்சிவெளிப்பாடுகள் சீர்ப்படுத்தப்பட்ட நிலையிலே தோற்றம் பெற்ற கலைகள் ஓர் ஒழுங்கு நிலையிலே சமூகங்களிலே வழக்கிலிருந்து வந்திருக்கின்றன. இவற்றுள்ள முதன்மைக்கலைகளாக இசை, நடனம் இடம்பெற்றன. இக்கலைகளின் வளர்ச்சியின் பயனாக, உருப்படிகள் சமூகத்திற்கு வெளிப்படுத்த முயலுகின்ற கருக்களுக்கமைவாக இசைவடிவங்கள் தோற்றம்

பெற்றன. இந்த நிலையிலே இசை நடனப்புலங்களிலே வழக்கிலிருந்த இசை வடிவங்களாகப் பதங்களைப் பார்க்கமுடிகின்றது. ஆனால் பதம் என்கின்ற உருப்படி சிருங்கார ரசத்தினை முதன்மைப் படுத்துகின்ற உருப்படியாக விளங்கினாலும் இவ்வுருப்படிக்குரிய அடிப்படைப் பண்புகள் காலந்தோறும் கலைப் பண்பாட்டுப் புலங்களிலே பின்பற்றப்பட்டு வந்திருப்பதை தமிழிலக்கிய வரலாறுகள் எடுத்துரைக்கின்றன. தமிழ்ப் பண்பாட்டுப் புலங்களிலே சங்ககாலம் தொடக்கம் இந்த பதம் என்கின்ற உருப்படிக்கான பண்பியல்புகளையுடைய இசை மூலங்களை நாம் இனங்கண்டு கொள்ளமுடிகின்றது. சங்ககாலப் பாடல்களைத் தொடர்ந்து பக்திநெறிக் காலப்பதிகங்கள் வரை பதம் என்கின்ற உருப்படிக்கான அடித்தளமிடப்பட்டது என்றால் தவறில்லை. கர்நாடக இசையின் உள்நுழைவு பதம் என்கின்ற ஒரு பாடல்வடிவத்தை இசை மற்றும் நடனப்புலங்களிலே ஏற்படுத்தியிருந்தது. ஆகவே பதம் என்கின்ற உருப்படிக்குரிய பண்புகள் காலந்தோறும் தோற்றம் பெற்ற பாடல்களிலே இருந்தாலும் ஒரு செந்நெறி இசை வடிவமாக அந்த இயல்புகளை உள்வாங்கி பதமாக மிளிர்ந்தது என்றால் மிகையில்லை.

## Reference


Chelladurai, P.D., (2009) India Isai Karuvoolam, Kuselar, Pathippagam, Jaffna, Sri lanka.

Jeyarasa, S., (2007a) Aadarkalai, Poobalasingham Pathippagam, Jaffna, Sri lanka.

Jeyarasa, S., (2007b) Bharatanatya Azhagiyal, Poobalasingham Pathippagam, Jaffna, Sri lanka.

Natarasa, sa., (1954) Kalidasanin Megathudham, appothikkiri company, Colombo, Sri lanka.

Palaniappan, P.L., (2019) Nalayira Divya Prabhandham Uraiyudan 12 Parts, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2004) Kurunthogai, New Century Book House Pvt Ltd, Chennai, India.

Puliyur Kesikan, (2018) Thiruvasagam Moolamum Uraiyum, Mangai Veliyeedu, Chennai, India.

Seetha, S., (2001) Tanjore as a Seat of Music, During the $17^{th}$, $18^{th}$ and $19^{th}$ Centuries, University of Madras, Chennai, India.

Sivasami, V., (1988) Bharathakalai, New Eera Publication, Jaffna, Sri lanka.

Subiramaniya Pillai, K., (2014) Thiruvasagam Moolamum Uraiyum, Ramaiya Pathippagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License